**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

முன்னிலை: **திரு.பா.சரவணன், பி.எஸ்.சி., பி.எல்.,**
மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.168/2022**
(CNR No.TNTP01-003467-2022)

சுசீலா (எ) சரஸ்வதி,
க/பெ.ஸ்டான்லி,
த/பெ.பி.கலியபெருமாள் சேப்பிளார்,
கதவு எண்.7/5–91,
பாரதியார் தெரு, அம்மாகுளம்,
அரியமங்கலம்,
திருச்சி மாவட்டம். .... வாதி

/ எதிர் /

1. உமா (எ) ராஜலெட்சுமி,
க/பெ. சந்திரசேகர்,
த/பெ.பி.கலியபெருமாள் சேப்பிளார்,
எண்.257, கீழ தெரு, துவாக்குடி,
திருச்சி மாவட்டம்.

2. க.மல்லிகா (**இறந்துவிட்டார்**),
அவர் சார்பாக பாதுகாவலர்
உமா (எ) ராஜலெட்சுமி,
த/பெ.பி.கலியபெருமாள் சேப்பிளார்.
எண்.257, கீழ தெரு, துவாக்குடி,
திருச்சி மாவட்டம்.
*(Amended as per I.A.No.3/2023, dated on 08.11.2023)*

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 04.06.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தும், வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கனகராஜா அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.மருதமுத்து

அவர்கள் முன்னிலையாகியும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார், வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இரு தரப்பு வாதப் பிரதிவாதங்களை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கிடும்

## தீர்ப்புரை

1) தாவா அட்டவணை சொத்துக்களை அவற்றின் தன்மை மற்றும் மதிப்பிற்கேற்ப, 2 சமபாகங்களாகப் பிரிவினை செய்து, அதில், வாதிக்குண்டான 1/2 பங்கு பாகத்தை வாதிக்கு பிரித்து பாகபிரிவினை பாரிகாரம் வழங்க முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும், வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தாக்கல் செய்த திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:**

2.1) வாதியும், 1ம் பிரதிவாதியும் இறந்துபோன 2ம் பிரதிவாதியும் கலியபெருமாள் சேப்பிளார் மகள்கள் மற்றும் சட்டபடியான வாரிசுகள் ஆவார்கள். தாவா சொத்துக்கள் வாதியின் தந்தையார் கலியபெருமாள் சேப்பிளார் என்பவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது. கலியபெருமாள் சேப்பிளார் 15.01.2010ம் தேதி காலமாகிவிட்டார். வாதியின் தாயாரும் காலமாகிவிட்டார். எனவே, தாவா சொத்துகளுக்கு அவரது வாரிசுகளான தற்போது உயிருடன் உள்ள வாதியும், 1ம் பிரதிவாதியும் மட்டுமே உரிமையாளர்கள் ஆவார்கள். அவர்களது தந்தையார் உயிருடன் இருந்தவரை கூட்டுக் குடும்ப நிர்வாகி என்ற முறையில்

சொத்துக்களை நிர்வாகம் செய்து வந்தார். அதில், கிடைத்த கூடுதல் வரும்படியை வைத்து சில சொத்துகள் வாங்கப்பட்டன.

2.2) வாதியின் தந்தையும், தாயாரும் காலமான பிறகு, வாதிக்கு வாரிசு அடிப்படைகளில் சரிசமமாக சொத்து பாகம் கிடைக்க கூடியது. இரண்டாம் பிரதிவாதி மூளை வளர்ச்சி இல்லாதவர். அவரை 1ம் பிரதிவாதி பராமரித்தார். சொத்துக்களையும் 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வருகிறார். வாதிக்கு திருமணமாகி அரியமங்கலத்தில் குடும்பத்துடன் வசிக்கிறார். வாதி சற்று தொலைவில் வசிப்பதை பயன்படுத்திக் கொண்டு, 1ம் பிரதிவாதி சொத்துகளின் வருவாய் ஆவணங்களை தனது இளவர் மகன்கள் பெயரிலும், 3ம் நபர்கள் பெயரிலும், மாற்ற முயற்சி செய்து வந்தார். வாதி சொத்துகளில் பாகம் பிரிக்க கோரி, 20.01.2013 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை பெற்றுக்கொண்டு, 1ம் பிரதிவாதி பொய்யான தகவல்களுடன் பதிலறிவிப்பு அனுப்பினார். 1ம் பிரதிவாதி தனக்காகவும், தனது இளவர் மகன்கள் சுந்திரராஜன், மாதவன் என்பவருக்கு காப்பாளராகவும் இருந்து. தன் மீதும் தங்கமணி என்பவர் மீதும் திருச்சிராப்பள்ளி, முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 321/2013 தொடர்ந்தார்.

2.3) அவர், 1ம் பிரதிவாதி, அவரது தகப்பனார் கலியபெருமாள் சேப்பிளார் கடந்த 29.05.2007 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட உயிலை எழுதி வைத்துவிட்டு, 15.01.2010ல் காலமாகிவிட்டதால் மேற்படி உயில்படி

சொத்துக்கள் தனது இளவர் மகன்களான சுந்திரராஜன், மாதவன் ஆகியோருக்கு சொந்தம் எனக் கூறி வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் சாட்சிகள் விசாரணைக்கு பின்பு நீதிமன்றம் உயில் எழுதி வைக்க மேற்படி கலியபெருமாள் சேப்பிளியர் என்பவருக்கு உரிமை இல்லை என்றும், அதனால் உயில் செல்லாது என தீர்ப்பளித்து, வழக்கை 31.03.2020 அன்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் மீது மேல்முறையீடு ஏதும் இல்லை. வாதி பலமுறை கேட்டும் பிரதிவாதிகள் சமரசமாக பாகம் செய்ய முன்வரவில்லை. எனவே, வழக்கு தாக்கல் செய்தார்.

2.4) வழக்கு நிலுவையில் இருந்தபோது, 2ம் பிரதிவாதி திருமணமாகாமல் காலமாகிவிட்டார். பிரதிவாதிகள் எதிருரையில் சொல்லியிருப்பது போல கலியபெருமாள் சேப்பிளார் ஒரு உயில் எழுதி, அவர் காலமான பிறகு, சொத்துகள் 1ம் பிரதிவாதி மகன்கள் சுந்தரராஜன், மாதவன் பாத்தியப்பட்டது என்று செல்வது பொய்யும் மோசடியுமாகும். அ.வ.எண்.321/2013ல் கடந்த 31.01.2020 அன்று ஏற்பட்ட தீர்ப்பு இறுதியாகி விட்டது. அதன்பேரில் மேல்முறையீடு ஏதுவும் இல்லை. எனவே, கலியபெருமாள் சேப்பிளார் எழுதி வைத்ததாக சொல்லும் உயில் செல்லதக்கதல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டபடியால், இந்து வாரிசுரிமை சட்டப்படி வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கு சரிசமமாக பாகம் கிடைக்கதக்கது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

### 3. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையின் சுருக்கம்

3.1) 2ம் பிரதிவாதி மல்லிகா இறந்துவிட்டார். வாதி சுசிலா என்கிற சரஸ்வதி 1ம் பிரதிவாதியின் மூத்த சகோதரி. வாதி, மேற்படி வழக்கை 1ம் பிரதிவாதிக்கெதிராக தாவா சொத்துக்களான திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் தாலுக்கா, துவாக்குடி கிராமம், புல எண்: 200/3–26 சென்ட்= 11,336 ச.அடி, மனை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கூரைவீடு –அயிட்டம்–1, துவாக்குடி கிராமம், நன்செய் புல எண்: 135/1– 1.30 ஏக்கர் மற்றும் அதனருகிலுள்ள தோட்டம்–அயிட்டம்–2, துவாக்குடி கிராமம், நன்செய் புல எண்: 135/7–11 சென்ட் நாற்றங்கால் நிலம்– அயிட்டம்–3, துவாக்குடி கிராமம், நத்தம் புல எண்: 200/1–2000 ச.அடி காலி இடமும் அதில் உள்ள ஓட்டுவில்லை வீடும் அயிட்டம்–4, ஆகிய சொத்துக்களில் 2–இல் 1 பாகம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

3.2) மேற்படி சொத்துக்கள் அனைத்தும், தன் தகப்பனார் கலியபெருமாள் சேப்பிளையார் அவர்களுக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். திருச்சி நெ.1. இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட கிரைய ஆவணம் எண்:4508/1966, நாள்: 19.08.1966, மூலம் தன் தகப்பனார் கலியபெருமாள் சேப்பிளையார், 1ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், புல எண்: 200/3–26 சென்ட்டுக்கு அதிகமாக 33 சென்ட் புன்செய் நிலம் கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் 19.08.1966 தேதியிட்டது. அவர் பெயரிலுள்ள, 1ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், புல எண்: 200/3– 13.5 ஏர்ஸ்க்கான

பட்டா எண் 191, 06.09.2021 தேதியிட்டது. 2ம் அயிட்ட சொத்தாவான, துவாக்குடி கிராமம், நன்செய் புல எண்: 135/1–46 ஏர்ஸ் பட்டா எண் 191, ஆவணம் எண்: 2 இல் கட்டுப்பட்டது ஆகும். தன் தகப்பனார் கலியபெருமாள் அவர் பெயரில் உள்ள, 3ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், நன்செய் புல எண்: 135/7B– 4 ஏர்ஸ்க்கான பட்டா எண் 185, 11.10.2022 தேதியிட்டது. திருச்சி நெ.1, இணை சாரபதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட கிரைய ஆவணம் எண்: 5456/1961. நாள்:20.09.1961. மூலம் தன் தகப்பனார் கலியபெருமாள் சேப்பிளையார், 4ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம். புல எண்: 200/1– கிழமேல் 29.5 அடி, தென்வடல் 11 அடி, 324.5 ச.அடி, மனையிடம் மற்றும் அதில் கட்டியுள்ள கூரை வீடு கிரயம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் 20.09.1961 தேதியிட்டது. 4ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், நத்தம் பழைய புல எண்: 200/1– புதிய புல எண்:794/12– 85 ச.மீ க்கான பட்டா எண்: 1783, 25.12.1993 தேதியிட்டது.

3.3) தன் தகப்பனார் கலியபெருமாள் சேப்பிளையார் தன்னுடைய வாழ்நாளில் 29.05.2007, அன்று திருவெறும்பூர், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எண்: 32/புத்தகம்–3/2007 ன்படி அவருக்குச் சொந்தமான 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை, தன்னுடைய பேரன்களான: ச.சுந்தர்ராஜன், த/பெ. சந்திரசேகர், வயது–13, மற்றும் ச.மாதவன், வயது–6, த/பெ. சந்திரசேகர், ஆகியவர்களுக்கு, தன்னுடைய ஆயுளுக்குப் பிறகு

உரிமையானவர்கள் என்று எழுதி வைத்துள்ளார். அவர் எழுதி வைத்துள்ள அந்த உயில் ஆவணம் எண். 32/புத்தகம்–3/2007, 29.05.2007 தேதியிட்டது. அசல் திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 321/2013 ல் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட உயில் எழுதி வைத்த கலியபெருமாள் சேப்பிளையார், த/பெ.பெரியசாமி சேப்பிளையார். 15.01.2010 அன்று இறந்துவிட்டார். மேற்படி அசல் வழக்கு எண். 321/2013 ல் ச.சுந்தர்ராஜன், ச.மாதவன், உமா என்கிற ராஜலட்சுமி எதிராக சுசிலா என்கிற சரஸ்வதி, தங்கமணி ஆகியவர்கள் தரப்பினரான வழக்கில், 31.01.2020 வழங்கிய தீர்ப்பில், "எழுவினா 2 க்கான முதல் பிரதிவாதி தன்னுடைய எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதுபோல், கலியபெருமாள் எழுதி வைத்த 29.07.2007 தேதியிட்ட உயில் மோசடியானதா என்கின்றதற்கு, பத்தி 11 இல் வா.சா.2 நீலமேகம், உயிலில் சாட்சி கையெழுத்து போட்டவரின் சாட்சியத்தை எடுத்துப்பார்க்கும்போது, உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டதற்கான எந்த சான்றும் இல்லை. எனவே, உயிலை கலியபெருமாள் சேப்பிளையார் தான் எழுதியுள்ளார் என்றும், பத்தி 14 இல் எழுவினா–2: வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டபோதிலும்" என்றும் தீர்வு கண்டதன் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உயில் ஆவணம் எண்: 32/புத்தகம்–3/2007, செல்லத்தக்கதாகும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (PDM) முன்பான அசல் வழக்கு எண். 321/2013 ல் வழங்கிய தீரப்பின் நகல் 31.01.2020 தேதியிட்டது.

3.4) மேற்குறிப்பிடப்பட்டுள்ள உயில் ஆவணம் எண்: 32/புத்தகம்–3/2007, செல்லத்தக்கது என்பதால், உயிலில் கண்டுள்ள பயனாளிகளான ச.சுந்தரராஜன், த/பெ.சந்திரசேகர் மற்றும் ச.மாதவன், த/பெ.சந்திரசேகர் ஆகியவர்களுக்கு, கலியபெருமாள் சேப்பிளையார் இறப்பு தேதியான 15.01.2010 க்குப் பிறகு, தாவா சொத்துக்கள் உரிமையாகிவிட்டன. அவர்களுக்கு, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜூன் 2022ல் 27 வயது மற்றும் 21 வயது ஆகின்றது. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. மேற்குறிப்பிட்ட ச.சுந்தர்ராஜன், ச.மாதவன் ஆகிய 1ம் பிரதிவாதியின் மகன்கள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகிய மூவரும், 4ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், நத்தம் பழைய புல எண்: 200/1. புதிய புல எண்:794/12– 85 ச.மீ. நெ.1/257. கீழத் தெரு, துவாக்குடி, திருச்சி–620015ல் உள்ள ஓட்டு வீட்டில் வசிக்கின்றனர். ச.சுந்தர்ராஜன், 2ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம். நன்செய் புல எண்: 135/1– 46 ஏர்ஸ் மற்றும் 3ம் அயிட்ட சொத்தான, துவாக்குடி கிராமம், நன்செய் புல எண்: 135/7B– 4 ஏர்ஸ் நிலங்களில் விவசாயம் செய்து வருகிறார். வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு ஏற்புடையதல்ல. வாதி வேண்டியுள்ள பரிகாரம் பெறுவதற்கு வாதிக்கு உரிமையில்லை. பிரதிவாதியை அலைக்கழிப்பதற்காக தாக்கல் செய்த வழக்கு ஆகும். எனவே, வாதியின் வழக்கை இந்த 1ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, வழக்கின் தீர்விற்காக 23.11.2022 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் விசாரணைக்காக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டது.

5) <u>**எழுவினாக்கள்:**</u>

1. 29.05.2007 தேதியிட்ட, கலியபெருமாள் சேப்பிளையார் அவர்களின் உயில் உண்மையானதா?
2. வாதி கோரியபடி, பாகபிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை கிடைக்கத்தக்கதா ?
3. வாதிக்கு பாகபிரிவினை கிடைக்குமெனில், அவருக்கு கிடைக்கும் பாகத்தின் அளவு என்ன ?
4. வேறு ஏதேனும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா ?

6) வாதி தரப்பில், சுசீலா (எ) சரஸ்வதி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில், உமா (எ) ராஜலெட்சுமி என்பவர் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7) <u>எழுவினாக்கள் 1 முதல் 3:</u>**

மேற்படி மூன்று எழுவினாக்களிலும், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதால், அவற்றுக்கு

பொதுவாக விடையளிக்க வேண்டியுள்ளது.

8) **இருதரப்பு வாத உரைகள்:**

9) வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வழக்குரையில் உள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, தாவா சொத்துக்கள் கலியபெருமாள் சேப்பிளாரின் பூர்வீக சொத்துக்கள் என்றும், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி மட்டுமே தற்போது வாரிசுகள் என்றும், கலியபெருமாள் சேப்பிளாரும், அவரது மனைவியும் இறந்து விட்டார்கள் என்றும், அதேபோல் வழக்கு நிலுவையிலிருக்கும்போது, 2ம் பிரதிவாதி இறந்து விட்டார் என்றும், ஏற்கனவே பிரதிவாதி மற்றும் அவரது மகன்கள் வாதிகளாக இருந்து அ.வ.எண்.321/2013 என்ற வழக்கை திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், அதில், கலியபெருமாள் சேப்பிளார் எழுதியதாகக் கூறப்படும் உயில் அடிப்படையில், அந்த வாதிகள் உரிமை கோர முடியாது என்று முடிவு செய்து, அந்த வழக்கு தள்ளுபடியாகியுள்ளதாகவும், அதை எதிர்த்து அவர்கள் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லையென்றும், எனவே, இந்த வழக்கில் வாதியின் உரிமை நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் வாதிட்டார்.

10) 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளையே விவரித்துக் கூறி, தாவாசொத்துக்கள் கலியபெருமாள் சேப்பிளாரின் பூர்வீக சொத்துக்கள் என்பது

தவறு என்றும், அதில், 4 அயிட்ட சொத்துக்கள் அவரது சுய சம்பாத்திய சொத்துக்கள் என்றும், மேற்படி சொத்துக்களை அவரது பேரன்களுக்கு 29.05.2007 தேதியிட்ட உயிலை எழுதி வைத்துள்ளார் என்றும், திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.321/2013 வழக்கில் அந்த உயில் உண்மையானது என்றுதான் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாகவும், 1ம் பிரதிவாதியின் மகன்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லையென்றும், எனவே, உரிய தரப்பினரை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றும் வாதிட்டார்.

11) இந்த வழக்கின் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் ஆகியோர், கலியபெருமாள் சேப்பிளார் என்பவரின் மகள்கள் என்பது, இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. கலியபெருமாளும், அவரது மனைவியும் ஏற்கனவே இறந்து விட்டார்கள் என்பதும், இந்த வழக்கு நிலுவையிலிருக்கும்போது, அவரது மற்றொரு மகளான 2ம் பிரதிவாதியும் இறந்து விட்டார் என்பதும், இருதரப்பாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த வழக்கு வாதி தரப்பில், தாவாசொத்துக்கள் கலியபெருமாள் சேப்பிளாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட, கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்றும், அவர் கடந்த 29.05.2007 அன்று எழுதி வைத்ததாகக் கூறி, ஒரு உயில் அடிப்படையில் தாவா சொத்துக்கள் தொடர்பாக 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன்களான சுந்தரராஜன், மாதவன் ஆகியோருக்கு

பாத்தியப்பட்டதாகக் கூறி, திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில், அ.வ.எண்.321/2013 என்ற வழக்கை தாக்கல் செய்ததாகவும், அந்த வழக்கு 31.01.2020 அன்று முழு விசாரணைக்குப் பிறகு, தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லையென்றும், எனவே, அந்த வழக்கின் தீர்ப்பு, இந்த வழக்கின் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

12) மாறாக, 1ம் பிரதிவாதி மேற்படி 29.05.2007 தேதிய உயில் உண்மையானது என்று தான் அ.வ.எண்.321/2013 வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் கலியபெருமாள் சேப்பிளாரின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த உயிலில் கண்ட சொத்துக்களைப் பொறுத்து வாதி பாகம் கோரமுடியாது என்றும், 1ம் பிரதிவாதியின் மகன்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் கட்சி செய்யப்பட்டுள்ளது.

13) இது தொடர்பாக, மேற்படி உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அ.வ.எண். 321/2013 வழக்கு தொடர்பாக, பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட 1ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

" எனது தந்தை குடும்பத்திற்கு பூர்வீகம் திருச்சி துவாக்குடி என்றால் சரிதான். இந்த வழக்கில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் தவிர என் தந்தை கலியபெருமாள் குடும்பத்திற்கு பூர்வீகமாக வேறு சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு முழுமையாக தெரியாது. என் தந்தைக்கு தொழில் விவசாயம் என்றால் சரிதான். அது தவிர பால் வியாபாரமும் செய்தார். இந்த வழக்குச் சொத்துக்கள் தொடர்பாக எனக்கும் வாதிக்கும் ஏற்கனவே திருச்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான். அது அ.வ.எண்.321/2013 என்றால் சரிதான். அந்த வழக்கு நான் தாக்கல் செய்தது என்றால் சரிதான். அது முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த தீர்ப்புரையில் வழக்குச் சொத்துக்கள் என் தந்தை கலியபெருமாளின் பூர்வீகச் சொத்துக்கள் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் தான் அ.வ.எண்.321/2013 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவாச் சொத்துக்கள் கலியபெருமாளின் பூர்வீகச் சொத்துக்கள் என்று தான் நாங்களே கூறியுள்ளோம் என்றும் அதை நீதிமன்றமும் உறுதி செய்துள்ளது என்று சொன்னால் தெரியாது."

14) திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடந்த அ.வ.எண்.321/2013 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இந்த

வழக்கில் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில், 31.01.2020ம் தேதியில் பிறப்பித்த தீர்ப்புரை பத்தி எண்கள் 10 மற்றும் 11ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது,

" 10) மேலும், 3ம் வாதியே, வழக்குச் சொத்து மூதாதையர் சொத்து என்றும் ஒப்புக்கொள்கிறார். வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது, "வழக்குச் சொத்துக்களை என் தந்தை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். என் தந்தை குடும்பத்திற்கு ஆதியிலிருந்து நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் ஒரு பகுதிதான் வழக்குச் சொத்துக்கள் என்றால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளார். அதிலிருந்து வழக்குச் சொத்துக்கள் 3–ம் வாதியின் தந்தைக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று வாதியே ஒப்புக் கொண்டுள்ளார். அப்படியிருக்கும் நிலையில், வழக்குச் சொத்துக்கள் 1, 2 வாதிகளுக்கு உயில்வழியில் எப்படி பாத்தியப்படுத்த முடியும் என்பதற்கு வாதி தரப்பில் தகுந்த காரணம் எதுவும் சொல்லப்படவில்லை. 3–ம் வாதியின் தந்தை கலியபெருமாள் சேப்ளையாருக்கு வழக்குச் சொத்துக்கள் பூர்வீகமாய் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ற நிலையில், பாகம் பிரிக்கப்படாத சொத்தில் அவருடைய பங்கு குறித்து மட்டுமே உயில் எழுதி வைக்க முடியும்.

11) வா.சா.2 உயிலில் சாட்சி கையெழுத்து போட்டவரின் சாட்சியத்தை எடுத்து பார்க்கும்போது, உயில் மோசடியாக தயாரிக்கப்பட்டதற்கான எந்த சான்றும் இல்லை. எனவே, உயிலை கலியபெருமாள் சேப்ளையார்தான்

எழுதியுள்ளார். ஆனால், அவருக்கு உயில் எழுதி வைப்பதற்கான உரிமை உள்ளதா? என்று பார்த்தால், வாதியே வழக்குச் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று ஒப்புக்கொண்ட நிலையில், கலியபெருமாள் சேப்ளையார் வழக்குச் சொத்துக்களை 1, 2 வாதிகளுக்கு பாத்தியப்படுத்தி உயில் எழுத உரிமை இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது."

15) எனவே, மேற்படி வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.321/2013 வழக்கின் தீர்ப்புரையை பரிசீலிக்கையில், மேற்படி வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக இந்த வழக்கு 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன்கள் சுந்தரராஜன், மாதவன் ஆகியோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் இந்த வழக்கு வாதி 1ம் பிரதிவாதியாக உள்ளார். மேற்படி வழக்கில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 31.01.2020 அன்று முழு விசாரணைக்குப் பிறகு தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பில் மேலேவிவரித்த 10 மற்றும் 11வது பத்திகளில் அதில் கண்ட சொத்துக்கள், கலியபெருமாள் சேப்பிளாரின் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதை அந்த வழக்கின் வாதியான இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியே ஒப்புக்கொண்டுள்ளதாகவும், எனவே, கலியபெருமாள் சேப்பிளார் வழக்குச் சொத்துக்களை அந்த வழக்கின் 1,2 வாதிகளுக்கு பாத்தியப்படுத்தி உயில் எழுதி வைக்க உரிமையில்லை என்று தீர்மானிக்கிறது என்று முடிவு செய்து, மேற்படி வழக்கை தள்ளுபடி செய்துள்ளது.

16) எனவே, இதே தரப்பினர்களிடையே நடந்த முந்தைய வழக்கில், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ 6 ஆவணம், அதாவது 29.05.2007 தேதியிட்ட கலியபெருமாள் சேப்பிளார் எழுதி வைத்ததாகக் கூறும் உயில் மோசடியாக தயாரிக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருந்தபோதும், இந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், கலியபெருமாள் சேப்பிளாருக்கு 1, 2 வாதிகளுக்கு எழுதி வைக்க உரிமையில்லை என்றும் முடிவு செய்து, திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அ.வ.எண். 321/2013 வழக்கை தள்ளுபடி செய்துள்ள நிலையில், கட்டாயம் அதை எதிர்த்து அந்த வழக்கின் வாதிகள் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லையென்று, 1ம் பிரதிவாதியே தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, மேற்படி அ.வ.எண். 321/2013 வழக்கிலேயே, தாவாசொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், அதைப் பொறுத்து மேற்படி உயில் எழுதி வைக்க கலியபெருமாள் சேப்பிளாருக்கு உரிமையில்லையென்றும், தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், அதை எதிர்த்து மேல்முறையீடு செய்யாமல், அதே வாதத்தை இந்த வழக்கில் எழுப்பிய 1ம் பிரதிவாதியின் கூற்று ஏற்புடையதல்ல என முடிவு செய்யப்படுகிறது.

17) பொதுவாக, ஒரு கூட்டுரிமையாளர், பூர்வீக சொத்தில், தனது பாகத்தை பொறுத்து மட்டும் உயில் எழுத உரிமையுண்டு என்றாலும், இதே சொத்துக்கள்

பூர்வீக சொத்துக்கள் என்றும், அதைப்பொறுத்து உயில் எழுத கலியபெருமாள் சேப்பிளாருக்கு உரிமையில்லையென அ.வ.எண். 321/2013 வழக்கில் தீர்மானித்துள்ளதால், அந்த வழக்கின் தீர்ப்பு, முன் தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி, இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியைக் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதாகும். எனவே, கலியபெருமாள் சேப்பிளார் எழுதி வைத்ததாகக் கூறப்படும், 29.05.2007 தேதிய உயில் தொடர்பாகவும், அதில் கண்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், கலியபெருமாள் சேப்பிளார் வழக்குச் சொத்துக்களை, அந்த வழக்கின் 1,2 வாதிகளுக்கு பாத்தியப்படுத்தி, உயில் எழுதி வைக்க உரிமையில்லை என்றும், முந்தைய அசல் வழக்கு எண்.321/2013 வழக்கிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அந்த தீர்ப்பு முன் தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி, இந்த வழக்கின் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் என்று முடிவு செய்யப்படுகிறது. எனவே, மேற்படி உயிலின் அடிப்படையில், தன் மகன்களுக்கு பரிகாரம் உண்டு என்றும், அவர்கள் தேவையான தரப்பினர்கள் என்றும், 1ம் பிரதிவாதி தரப்பில் எழுப்பப்பட்ட வாதம், முன் தீர்ப்பு தடை கோட்பாட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளதென **எழுவினா 1–**க்கு முடிவு செய்யப்படுகிறது.

18) எனவே, தாவா சொத்துக்களில் கலியபெருமாள் சேப்பிளாரின் வாரிசுகளில், வாதி மற்றும் 1ம் பிரதிவாதி மட்டுமே உயிருடன் உள்ளதால், அவற்றில் அவர்களுக்கு தலா 1/2 பாகம் கிடைக்கத்தக்கதாகும். எனவே, வாதி கோரியவாறு, தாவாசொத்துக்களில் வாதிக்கு 1/2 பாகம் பாகப்பிரிவினை செய்ய

முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம், வாதிக்கு வழங்கத்தக்கது தான் என **எழுவினாக்கள் 2 மற்றும் 3**–க்கு முடிவு செய்யப்படுகிறது.

**19) <u>எழுவினா 4:</u>**

இந்த வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலை கருதியும், தரப்பினர்கள் உறவுமுறை கருதியும், இந்த வழக்கில் அவரவர் செலவுத்தொகையை, அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென **எழுவினா 4**–க்கு முடிவு செய்யப்படுகிறது.

**20) <u>முடிவாக,</u>**

1) திருச்சி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.321/2013 ல், 31.01.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை, முன்தீர்ப்புதடை(Res judicata) கோட்பாட்டின்படி, இந்த வழக்கின் தரப்பினர்களை கட்டுப்படுத்தும் என்று முடிவு செய்யப்படுகிறது

2) எனவே, பி.வா.சா.ஆ 6 ஆக தாக்கல் செய்யப்பட்ட, மேற்படி முந்தைய வழக்கிலேயே முடிவு செய்யப்பட்ட உயிலின் அடிப்படையில், தன் மகன்களுக்கு பரிகாரம் உண்டு என்றும், அவர்கள் தேவையான தரப்பினர்கள் என்றும், 1ம் பிரதிவாதி தரப்பில் எழுப்பப்பட்ட வாதம், அசல் வழக்கு எண்.321/2013 தீர்ப்புரையின் அடிப்படையில், முன் தீர்ப்பு தடை கோட்பாட்டின்படி, பாதிக்கப்பட்டுள்ளதென முடிவு செய்யப்படுகிறது.

3) தாவாச் சொத்துக்களை, அவற்றின் தன்மை மற்றும் மதிப்பிற்கேற்ப, 2 சமபாகங்களாகப் பிரிவினை செய்து, அதில், வாதிக்குண்டான 1 பாகத்தை ( 1/2 பாகம்) பிரித்துக்கொடுக்க வேண்டுமென பாகபிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

4) இந்த வழக்கின் தரப்பினர்கள், அவரவர்கள் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்தீர்ப்புரையானது, என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்தபின், என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.19 18:21:15 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**திருச்சிராப்பள்ளி.**

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

வா.சா.1 சுசீலா (எ) சரஸ்வதி

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.07.2025 | கலியபெருமாளின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.2 | 20.01.2013 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 31.01.2020 | அ.வ.எண்321/2013 ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் |
| வா.சா.ஆ.4 | -- | கலியபெருமாளின் வம்சாவழிப் பட்டியல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

பி.வா.சா.1 உமா (எ) ராஜலெட்சுமி

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 19.08.1966 | கலியபெருமாள் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் – அசல் |
| பி.வா.சா.ஆ.2 | -- | பட்டா எண் 191 க்குரிய பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.3 | -- | பட்டா எண் 185 க்குரிய பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 20.09.1961 | கலியபெருமாள் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் – அசல் |
| பி.வா.சா.ஆ.5 | -- | பட்டா எண்.1783 தொடர்பான சர்வே நோட்டீஸ் – அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 29.05.2007 | கலியபெருமாள் எழுதி வைத்த உயிலின் பதிவு சான்றிதழ் |
| பி.வா.சா.ஆ.7 | 03.03.2010 | கலியபெருமாளின் இறப்பு சான்றிதழ் |
| பி.வா.சா.ஆ.8 | -- | பிரதிவாதியின் மகன் சுந்தராஜனின் ஆதார் அட்டை நகல் |
| பி.வா.சா.ஆ.9 | -- | பிரதிவாதியின் மகன் மாதவனின் ஆதார் அட்டை நகல் |
| பி.வா.சா.ஆ.10 | -- | 1ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை நகல் |

SARAVANAN B
Digitally signed by SARAVANAN B
Date: 2026.06.19 18:21:23 +0530

**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி**
**திருச்சிராப்பள்ளி.**